IN THE COURT OF THE SUBORDINATE JUDGE, METTUR

M.C.O.P. No.25/2017

Deposition of PW3 witness of Plaintiff/Petitioner/Defendant/Respondent solemnly affirmed by Bench Clerk in OP Section of this court in accordance with the provisions of Oaths Act 1969 (Act 44 of 1969) on **25.10.2024.**

| **Name** | : | மாதேசன் | **Caste** | : | |
|---|---|---|---|---|---|
| **S/o.** | : | சின்னதுரை | **Calling** | : | |
| **Village** | : | | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | |

**முதல் விசாரணை :–**

நான் தற்போது ஓமலூர் காவல்நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வளராக பணிபுரிந்து வருகிறேன். நீதிமன்றத்தில் இருந்து வரப்பெற்ற அழைப்பாணையின் பேரில் சாட்சியமளிக்க வந்துள்ளேன். அழைப்பாணையில் குறிப்பிட்டிருந்த ஆவணங்களை கொண்டு வந்துள்ளேன். ஓமலூர் காவல்நிலைய குற்ற எண்.779/2016 வழக்கிற்குரிய முதல் தகவல் அறிக்கையின் சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன். அது **ம.சா.ஆ.13** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி வழக்கில் ஐந்து சாட்சிகள் விசாரிக்கப்பட்டு வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி வழக்கின் case diary சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன். அது **ம.சா.ஆ.14** ஆக குறியீடு செய்யப்படுகிறது. (மேற்படி ஆவணம் 3ம் எதிர்மனுதாரர் ஆட்சேபணைக்குட்பட்டு குறியீடு செய்யப்படுகிறது.) மேற்படி வழக்கின் குற்ற இறுதி அறிக்கை கொண்டு வந்துள்ளேனா என்றால் கொண்டு வரவில்லை. மேற்படி ம.சா.ஆ.14 ஆவணத்தின்படி வழக்கு புலன்விசாரணை நிலுவையில் இருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

**3 ஆம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை –**

ம.சா.ஆ.13 மற்றும் ம.சா.ஆ.14 ஆவணங்களில் புலன்விசாரணை அதிகாரி யார் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் திரு.முருகன், காவல் உதவி ஆய்வாளர் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. ம.சா.ஆ.14 ஆவணம் எந்த தேதியில் எத்தனை மணிக்கு

எடுக்கப்பட்ட அறிக்கை என்றால் 10.12.2016ம் தேதி 11.30 மணிக்கு எடுக்கப்பட்டதாகும். விபத்து நடந்த தேதி 08.12.2016 இரவு 9.00 மணிக்கு என்றால் சரிதான். 10.12.2016ந்தேதியன்று உள்ள புலன்விசாரணை நிலையை தான் 7வது வரிசையில் "Under Investigation" என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையின்படி குற்றம் 279, 337இதச என்றுதான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 337 இதச பிரிவு என்பது சொற்ப காயங்கள் ஏற்படுத்துவது என்றால் சரிதான். விபத்து நடந்து 8 வருடங்கள் ஆகியும் குற்றப்பத்திரிக்கை இதுவரை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இன்றைய தேதி வரை குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யாததற்கு காரணம் என்னவென்றால் ஏற்கனவே புலன்விசாரணை செய்து வந்த காவல் உதவி ஆய்வாளர் திரு.முருகன் அவர்கள் பணிமாறுதல் பெற்று சென்றுவிட்டார். தற்போது மேற்படி வழக்கை காவல் உதவி ஆய்வாளர் திரு.மூர்த்தி புலன்விசாரணை செய்து வருகிறார். 337 இதச பிரிவு புலன்விசாரணையை 6 மாத காலத்திற்குள் முடித்து அறிக்கை தாக்கல் செய்திருக்க வேண்டும் என்றும் மேற்படி வழக்கு காலவரையால் பாதிக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் அது பற்றி புலன்விசாரணை அதிகாரியைதான் கேட்க வேண்டும். 6 மாதத்திற்குள் புலன்விசாரணையை நிறைவு செய்யாமல் வழக்கு கோப்பை நிலுவையில் வைத்திருப்பது தவறுதான் என்றால் சரிதான். காவல் துறையில் Tamil Nadu Police Citizen Portal என்ற இணையதளம் உள்ளது என்றால் சரிதான். காவல்நிலையத்தில் பராமரிக்கப்பட்டு வரும் முதல் தகவல் அறிக்கை மற்றும் இதர வழக்கு ஆவணங்களை மேற்படி இணையதளத்தின் மூலம் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் எ.ம.சா.ஆ.1 ஆவணம் 28.12.2018ம் தேதி பதிவிறக்கம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் புலன்விசாரணை அதிகாரி பெயர் காவல் உதவி ஆய்வாளர் திரு. முருகன் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எ.ம.சா.ஆ.1 ஆவணத்தில் Status : Referred (Mistake of fact) என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பிழையுள்ளதாக முடிக்கப்பட்டுள்ள வழக்கை தெரிந்துகொண்டே தற்போது வழக்கு புலன்விசாரணை நிலுவையில் இருப்பதாக மனுதாரருக்கு உதவும் நோக்கத்தோடு உண்மைக்கு புறம்பாக சாட்சியமளிக்கிறேன்

**என்றால் சரியல்ல. 3ம் எதிர்மனுதாரர் தரப்பில் நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை எங்களுக்கு அனுப்பப்பட்டு எங்கள் தரப்பில் ஆவணங்களை தாக்கல் செய்யாமல் தற்போது மனுதாரருக்கு உதவி செய்யும் நோக்கத்தோடு ஆவணங்களை தாக்கல் செய்து உண்மைக்கு புறம்பாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.**

**மறுவிசாரணை – இல்லை**

ஒம்/-மாதேசன்

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/–எல்.கமலகண்ணன்,
சார்பு நீதிபதி,
மேட்டூர்.